**Secretarial Section**
Head Office, 57- V.E. Road,
Thoothukudi – 628 002.
☏: 0461-2325136
**e-mail : secretarial@tmb.bank.in**
**CIN: L65110TN1921PLC001908**

Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

Ref.No.TMB.SE.85/2026-27

26.10.2026

The Manager
National Stock Exchange of India Limited,
Exchange Plaza, 5th Floor, Plot No. C/1,
'G' Block, Bandra - Kurla Complex,
Bandra (East), Mumbai - 400 051.

The Manager
BSE Limited,
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai – 400 001.

**Ref: Symbol: TMB / Scrip Code: 543596**

Dear Sir/Madam,

**Sub: Press Release – Q2 Results**

Pursuant to Regulation 30 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we are enclosing the Press Release made by the Bank titled – **“Unaudited Financial Results of the Bank for the quarter and half-year ended September 30, 2026”**

Kindly take the information on record.

Yours faithfully,
**For Tamilnad Mercantile Bank Limited**

SWAPNIL ASHOK YELGAONKAR
Digitally signed by SWAPNIL ASHOK YELGAONKAR
Date: 2026.10.26 19:53:28 +05'30'

**Swapnil Yelgaonkar**
**Company Secretary & Compliance Officer**

Regd. Office
57, V.E. Road,
Thoothukudi - 628 002

**Tamilnad Mercantile Bank Ltd.,**
**Customer Value Enhancement Department,**
**Head Office, Thoothukudi**

## PRESS RELEASE

Date: 26.10.2026
Place: Thoothukudi

# Unaudited Financial Results of the Bank for the Quarter Ended / Half Year Ended September 30, 2026

Tamilnad Mercantile Bank Ltd (TMB), one of the renowned Old Private Sector Banks, having its headquarters in Thoothukudi has a long-cherished history of 105 years of eventful existence with strong fundamentals and an enviable track record of continuous profit making in the industry.

TMB is having pan India presence with 631 branches and 13 Regional Offices across 17 states and 4 Union Territories and serves more than 5.3 million satisfied customers.

The Board of Directors of Tamilnad Mercantile Bank Ltd has approved the Unaudited Financial Results of the Quarter Ended / Half Year Ended September 30,2026 in their meeting held at Thoothukudi on 26.10.2026. Shri. Salee S Nair, Managing Director and CEO of the Bank declared the results. The Chief Financial Officer, Executive Vice Presidents and other senior officials of the Bank were also present in the event.

Shri. Salee S Nair, MD & CEO, Tamilnad Mercantile Bank Ltd said, "Our performance in Q2 FY2027 reflects the strength of our core banking business, with retail banking continuing to be a key contributor and business gaining momentum overall. As we enter the festive season, we see opportunities to support increased business activity across the markets we serve, particularly among traders and MSMEs preparing for higher inventory requirements and working capital needs. With our deep understanding of local businesses and customer relationships built over decades, we are well positioned to support these evolving credit requirements while continuing to serve the financial needs of households. Going forward, our focus will be on building this business momentum, expanding our reach and ensuring that growth is supported by sound underwriting and a sustained commitment to customer service."

The Bank continues to post strong performance in all fundamental parameters.

## Bank's Performance Highlights for Q2 FY2027 (YoY)

- Total Business grew by 27.25%, highest year on year growth since listing of the Bank.
- Deposits grew by 25.49 % on YoY basis, deposits has increased to **₹69546** Crore (PY **₹55421** Crore)
- The Bank's CASA has increased to **₹17629** Crore (PY **₹15163** Crore)
- The advance level of the Bank has increased to **₹60691** Crore with a growth rate of **29.32%** on YOY basis.
- Lowest GNPA in the last 10 years at 0.61%

(₹ in Crore)

| Parameters | September 2026 (Q2) | September 2025 (Q2) | Growth – YoY % |
|---|---|---|---|
| Total Deposits | 69546 | 55421 | 25.49% |
| Total Advances | 60691 | 46930 | 29.32% |
| CASA | 17629 | 15163 | 16.26% |
| Total Business | 130237 | 102351 | 27.25% |
| Retail, Agri & MSME (RAM) | 57247 | 44392 | 28.96% |
| Net Profit | 451 | 318 | 42.09% |
| Networth | 10769 | 9444 | 14.03% |
| Book Value (₹) | 680.09 | 596.38 | 14.03% |
| ROA % | 2.18 | 1.85 | 33 bps |
| ROE % | 16.92 | 13.77 | 315 bps |
| Gross NPA(%) | 0.61 | 1.01 | -40 bps |
| Net NPA(%) | 0.14 | 0.26 | -12 bps |
| EPS (₹) (Not Annualised) | 28.49 | 20.05 | ₹8.44 |
| CRAR % | 32.39 | 30.96 | 143 bps |

- Net profit has surged to **₹451** Crore from **₹318** Crore, up by **42.09%**.
- Net NPA has decreased to **0.14%** from **0.26%,** improved by **12 bps.**
- PCR (without technical write-off) has improved to **77.49%** from **74.36%**
- Total SMA to Gross Advances has reduced to **1.67%** from **2.67%**, improved by **100 bps.**
- The CRAR % has increased to **32.39%** from **30.96 %,** improved by **143 bps.**
- Book value of share has increased to **₹680.09** from **₹596.38**
- The Net Interest Income is at **₹807** Crore for the quarter Q2FY27 as against **₹597** Crore for Q2FY26 registering a growth rate of **35.17%.**
- The Bank's Networth has increased to **₹10769** Crore (PY **₹9444** Crore) with an absolute rise of **₹1325** Crore registering a growth rate of **14.03%.**
- The RAM segment has increased to **28.96%** in Q2FY27 as against Q2FY26.

## New Branch Opening

- The Bank opened 3 New Branches during Q2FY27.

The Bank remains committed in delivering value to its stakeholders.

Regd. Office
57, V.E. Road,
Thoothukudi - 628002

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிட்.,**
**வாடிக்கையாளர் மதிப்பு மேம்பாட்டுத் துறை,**
**தலைமை அலுவலகம், தூத்துக்குடி**

**பத்திரிக்கைப் பிரசுரம்**

நாள் : 26.10.2026
இடம் : தூத்துக்குடி

## தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் தணிக்கை செய்யப்படாத காலாண்டு மற்றும் அரையாண்டு நிதிநிலை அறிக்கை – 30.09.2026

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட் (TMB), தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் நன்கு அறியப்பட்ட பழைய தனியார் துறை வங்கிகளில் ஒன்றாகும். 105 ஆண்டுகால சிறப்புமிக்க வரலாற்றையும், வலிமையான அடிப்படைக் கட்டமைப்புகளையும் கொண்டுள்ள இவ்வங்கி, வங்கித் துறையில் தொடர்ந்து லாபம் ஈட்டிவரும் சிறப்பான சாதனையைப் படைத்துள்ளது.

TMB, 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் 631 கிளைகள் மற்றும் 13 மண்டல அலுவலகங்களுடன் அகில இந்திய அளவில் இயங்கி வருகிறது. மேலும் 53 லட்சத்திற்கும் மேற்பட்ட (5.3 மில்லியன்) திருப்தியான வாடிக்கையாளர்களுக்குச் சேவை புரிந்து வருகிறது.

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் இயக்குநர்கள் குழு, செப்டம்பர் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை, 26.10.2026 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் அங்கீகரித்தது. வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு. சலீ எஸ். நாயர் அவர்கள் இந்த முடிவுகளை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தலைமை நிதி அதிகாரி, செயல் துணைத் தலைவர்கள் மற்றும் வங்கியின் பிற மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

திரு. சலீ எஸ். நாயர், MD & CEO, தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி லிமிடெட் தெரிவிக்கையில்:

“2026–27ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் எங்கள் வங்கியின் செயல்பாடு, எங்களது அடிப்படை வங்கிச் சேவைகளின் வலிமையைப் பிரதிபலிக்கிறது. சில்லறை

வங்கிச் சேவைகள் தொடர்ந்து முக்கியப் பங்களிப்பை வழங்கி வருவதுடன், ஒட்டுமொத்த வணிக நடவடிக்கைகளும் வளர்ச்சி வேகத்தைப் பெற்றுள்ளன. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நாங்கள் சேவை வழங்கும் சந்தைகளில் வணிக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளைக் காண்கிறோம். குறிப்பாக, அதிகரிக்கும் சரக்கு இருப்புத் தேவைகள் மற்றும் நடைமுறை மூலதனத் தேவைகளுக்குத் தயாராகி வரும் வர்த்தகர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் (MSME) வணிக வளர்ச்சிக்கு ஆதரவளிக்க வாய்ப்புகள் உள்ளன. உள்ளூர் வணிகங்கள் குறித்த எங்களது ஆழமான புரிதலும், பல ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுடன் ஏற்படுத்தியுள்ள வலுவான உறவுகளும், அவர்களின் வளர்ந்து வரும் கடன் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், குடும்பங்களின் நிதித் தேவைகளுக்குத் தொடர்ந்து சேவை வழங்குவதற்கும் எங்களைச் சிறந்த நிலையில் வைத்துள்ளன. எதிர்காலத்தில், இந்த வணிக வளர்ச்சி வேகத்தை மேலும் வலுப்படுத்துதல், எங்களது சேவைப் பரப்பை விரிவுபடுத்துதல், முறையான கடன் மதிப்பீட்டு நடைமுறைகள் மூலம் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவையில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படுதல் ஆகியவற்றில் எங்கள் கவனம் இருக்கும்."

வங்கி அனைத்து அடிப்படை அளவீடுகளிலும் தொடர்ந்து வலுவான செயல்திறனைப் பதிவு செய்து வருகிறது.

## <u>வங்கியின் செயல்திறன் சிறப்பம்சங்கள் (ஆண்டுக்கு ஆண்டு)</u>

• வங்கியின் மொத்த வணிகம் 27.25% வளர்ச்சியடைந்துள்ளது. இது பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டதிலிருந்து பதிவான மிக உயர்ந்த ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியாகும்.

• மொத்த வைப்புத்தொகைகள் 25.49% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியடைந்து ₹69,546 கோடியாக உயர்ந்துள்ளன (முந்தைய ஆண்டு ₹55,421 கோடி).

• வங்கியின் CASA வைப்புத்தொகை ₹15,163 கோடியிலிருந்து ₹17,629 கோடியாக உயர்ந்துள்ளது.

• மொத்த கடன்கள் 29.32% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியடைந்து ₹60,691 கோடியாக உயர்ந்துள்ளன.

• மொத்த வாராக்கடன் விகிதம் (GNPA) 0.61%-ஆகக் குறைந்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைந்த அளவாகும்.

(₹ கோடிகளில்)

| அளவீடுகள் | செப். 2026 (Q2) | செப். 2025 (Q2) | வளர்ச்சி YoY |
|---|---|---|---|
| மொத்த வைப்புத்தொகைகள் | 69,546 | 55,421 | 25.49% |
| மொத்த கடன்கள் | 60,691 | 46,930 | 29.32% |
| CASA | 17,629 | 15,163 | 16.26% |
| மொத்த வணிகம் | 1,30,237 | 1,02,351 | 27.25% |
| சில்லறை, விவசாயம் மற்றும் MSME (RAM) | 57,247 | 44,392 | 28.96% |
| நிகர லாபம் | 451 | 318 | 42.09% |
| நிகர மதிப்பு (Networth) | 10,769 | 9,444 | 14.03% |
| பங்கு மதிப்பு (₹) | 680.09 | 596.38 | 14.03% |
| ROA % | 2.18 | 1.85 | 33 bps |
| ROE % | 16.92 | 13.77 | 315 bps |
| மொத்த வாராக்கடன் (%) | 0.61% | 1.01% | -40 bps |
| நிகர வாராக்கடன் (%) | 0.14% | 0.26% | -12 bps |
| EPS (₹) (ஆண்டுமயமாக்கப்படாதது) | 28.49 | 20.05 | ₹8.44 |
| CRAR (%) | 32.39% | 30.96% | 143 bps |

• நிகர லாபம் ₹318 கோடியிலிருந்து ₹451 கோடியாக உயர்ந்துள்ளது. இது 42.09% வளர்ச்சியாகும்.

• நிகர வாராக்கடன் விகிதம் 0.26%-லிருந்து 0.14%-ஆகக் குறைந்துள்ளது. இது 12 அடிப்படைப் புள்ளிகள் (bps) முன்னேற்றமாகும்.

• PCR (தொழில்நுட்ப அடிப்படையிலான கடன் தள்ளுபடி நீங்கலாக) 74.36%-லிருந்து 77.49%-ஆக உயர்ந்துள்ளது.

• மொத்த கடன்களில் சிறப்புக் கண்காணிப்புக் கணக்குகளின் (SMA) விகிதம் 2.67%-லிருந்து 1.67%-ஆகக் குறைந்துள்ளது. இது 100 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றமாகும்.

• வங்கியின் மூலதனப் போதுமான விகிதம் (CRAR) 30.96%-லிருந்து 32.39%-ஆக உயர்ந்துள்ளது. இது 143 அடிப்படைப் புள்ளிகள் முன்னேற்றமாகும்.

• ஒரு பங்கிற்கான புத்தக மதிப்பு ₹596.38-லிருந்து ₹680.09-ஆக உயர்ந்துள்ளது.

• வங்கியின் நிகர வட்டி வருமானம் (NII), 2025–26ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் பதிவான ₹597 கோடியிலிருந்து, 2026–27ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் ₹807 கோடியாக உயர்ந்துள்ளது. இது 35.17% வளர்ச்சியாகும்.

• வங்கியின் நிகர மதிப்பு முந்தைய ஆண்டின் ₹9,444 கோடியிலிருந்து ₹10,769 கோடியாக உயர்ந்துள்ளது. இது ₹1,325 கோடி உயர்வையும், 14.03% வளர்ச்சியையும் குறிக்கிறது.

• RAM பிரிவின் பங்கு 28.96%- YoY வளர்ச்சியாகும்.

**புதிய கிளைகள் திறப்பு**

2026–27ஆம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் வங்கி 3 புதிய கிளைகளைத் திறந்துள்ளது.

வங்கி தனது பங்குதாரர்கள் மற்றும் அனைத்து தொடர்புடைய தரப்பினருக்கும் தொடர்ந்து மதிப்பை வழங்குவதில் உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.